தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 1322/2016/ந

ஆணை எண்: 161/2017

நாள்: 19/06/2017

திரு. M. சலீம்,
த/பெ. முகமது முஸ்தபா,
102, ஆபாத் பள்ளிவாசல் தெரு,
தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
தென்காசி நகராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. M. சலீம் என்பவரது 19.12.2016 நாளிட்ட முறையீட்டு மனு 22.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.1322/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் குற்றச்சாட்டு தொடர்பான விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், மனுதாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு அனுப்பியிருந்த 21.09.2016 நாளிட்ட கடித நகல் இணைக்கப்பட்டிருந்தது. அதில் தென்காசி நகராட்சியில் முறையான தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டும் பணியில் ஊழல் நடைபெற்றுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பதிலறிக்கையினை சமர்ப்பிக்குமாறு நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.1322/16/ந

நாள்:24.12.2016ன் மூலம் ஆணையிடப்பட்டது. மேலும், 15.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு 02.01.2017 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதனிடையே தென்காசி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.4008/2013/இ1 நாள்:13.02.2017 வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் புகாரில் குறிப்பிட்டுள்ள பணிகள் தொடர்பான கோப்புகள் அனைத்தும் திருநெல்வேலி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தென்காசி நகராட்சியில் தார் சாலையுடன் கூடிய இருபுறமும் மழைநீர் வடிகால் அமைக்க 2014-15ல் வார்டு 1, இரயில் நகரில் 2790 மீ. நீள மழைநீர் வடிகால் சுமார் ரூ.56 லட்சத்திற்கும், வார்டு 2ல் சிவ இளங்கோ நகரில் மழைநீர் வடிகால் சாலையின் இருபுறமும் அமைக்க 1770 மீ நீளத்திற்கு சுமார் ரூ.39/- லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதெனவும் தெரிவித்தார். வார்டு 1ல் 2790மீ மழைநீர் வடிகால் அமைக்காமல் 455.45 மீ மட்டுமே அமைத்தும், வார்டு 2ல் 1770 மீ. மழை நீர் வடிகால் அமைக்க வேண்டிய இடத்தில் மழைநீர் வடிகால் எதுவுமே அமைக்காமல் ரூ.95/- லட்சம் கையாடல் செய்துள்ளாரென புகார் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தென்காசி நகராட்சி ஆணையரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கை ந.க.எண்.4008/2013/இ1 நாள்: 10.03.2017ல் புகாரில் குறிப்பிட்டுள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புற உட்கட்டமைப்பு (UDM) 2013-14 திட்டத்தின் கீழ் மேற்கொண்ட பணிகள் தொடர்பான கோப்புகள் மற்றும் அளவு புத்தகங்கள் திருநெல்வேலி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் முதல் நிலை விசாரணையில் புகார் மனுவின் சங்கதிகளில் வழக்கு பதிவு செய்யக் கூடிய முகாந்திரம் இருப்பதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு புலனாய்வு அதிகாரியால் கண்டறியப்பட்டதால், சம்பந்தப்பட்டவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம்/988ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு தற்போது புலன் விசாரணையில் உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்காக சம்பந்தப்பட்ட கோப்புகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை வசம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு விசாரணை முடிவுற்றபின் நிலையினைத் தெரிவிக்குமாறு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்டுக் கொள்ளப்பட்டு விரிவான கடிதம் ந.க.எண்.1322/16/ந நாள்: 17.03.2017 மற்றும் 11.5.2017ல் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் / சங்கதிகள் குறித்து முகாந்திரங்கள் உள்ளதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையால் ஏற்கெனவே கண்டறியப்பட்டதாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், விசாரணை முடிவுற்றதும் சம்பந்தப்பட்டவர்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அனுமதி பெற்று குற்றப்பதிவு நடவடிக்கை தொடருமாறு 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டப் பிரிவு, 11ன் கீழ் ஆணையிடப்படுகிறது. மேலும், புலன் விசாரணை/பரிந்துரை அறிக்கை வரப்பெற்றதும் அவற்றின் நகலினை இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு அனுப்பி வைக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. தி. கந்தசாமி,
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
   திருநெல்வேலி,
2. கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை,
   திருநெல்வேலி.
3. திரு. M. சலீம்,
   த/பெ. முகமது முஸ்தபா,
   102, ஆபாத் பள்ளிவாசல் தெரு,
   தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.
4. நகராட்சி ஆணையர்,
   தென்காசி நகராட்சி,
   தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.